| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திரு.பெ.அய்யண்ணன், எம்.காம்., பி.எட்., எம்.ஃபில்.,<br>முதன்மைக் கல்வி அலுவலர்,<br>நாமக்கல். | பள்ளிக் கல்வி இயக்குநர்,<br>பள்ளிக் கல்வி இயக்ககம்,<br>சென்னை – 600 006. |

ந.க.எண்.12260/ஆ2/2019 நாள் 14.12.2020

பொருள் : நாமக்கல் மாவட்டம் – குமாரபாளையம் வட்டம்–சௌதாபுரம் அஞ்சல்–சங்ககிரி மெயின் ரோடு– செட்டியார்கடை– **கே.எஸ். கல்வி அறக்கட்டளை** மூலம் **கே.எஸ்.இண்டியன் ஸ்கூல்** என்ற புதிய சி.பி.எஸ்.இ. பள்ளி மத்திய பாடத் திட்டத்தின் கீழ் துவங்க தடையின்மைச் சான்று (இணைப்பு பெற) மற்றும் அங்கீகாரச் சான்று வேண்டி கருத்துரு பெறப்பட்டது – பரிந்துரை செய்து பணிந்தனுப்புதல் – தொடர்பாக.

பார்வை : குமாரபாளையம் வட்டம், சௌதாபுரம் அஞ்சல், சங்ககிரி மெயின் ரோடு, செட்டியார்கடை, **கே.எஸ்.இண்டியன் ஸ்கூல்** தாளாளரின் கருத்துரு நாள்.19.11.2019 மற்றும் 30.11.2020.

---

நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம் வட்டம், சௌதாபுரம் அஞ்சல், சங்ககிரி மெயின் ரோடு, செட்டியார்கடை, **கே.எஸ். கல்வி** அறக்கட்டளை மூலம் **கே.எஸ்.இண்டியன் ஸ்கூல்** என்ற புதிய சி.பி.எஸ்.இ. பள்ளி மத்திய பாடத் திட்டத்தின் கீழ் துவங்க தடையின்மைச் சான்று (இணைப்பு பெற) மற்றும் அங்கீகாரச் சான்று வேண்டி பார்வையில் காணும் கருத்துரு வரப்பெற்றது. மேற்காண் பொருள் சார்ந்து 27.11.2020 அன்று முதன்மைக் கல்வி அலுவலரால் பள்ளி பார்வையிடப்பட்டது.

கருத்துருவுடன் கீழ்க்காணும் ஆவணங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

1. கேட்புக் கடிதம் பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்கள் முகவரியிடப்பட்டு, வழி முதன்மைக் கல்வி அலுவலர் என குறிப்பிடப்பட்டு 2020–21ஆம் கல்வியாண்டில், பிரி.கே.ஜி முதல் 7 ஆம் வகுப்பு முடிய துவங்கப்படுகிறது என்ற விவரமும், பள்ளித் துவங்க தடையின்மைச் சான்று மற்றும் அங்கீகாரச் சான்று வேண்டிய கோரிக்கை இடம் பெற்றுள்ளது.

2. 2020–21 ஆம் கல்வியாண்டில் பிரி.கே.ஜி. முதல் 7 ஆம் வகுப்பு முடிய பள்ளியில் பயிலும் மாணவ / மாணவியர் எண்ணிக்கை விவரப் பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது.

3. பள்ளியில் உள்ள தளவாட சாமான்கள் / விளையாட்டு உபகரணங்கள் / ஆய்வக உபகரணங்கள் பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது.

4. நூலகப் புத்தகங்கள் பட்டியல் மற்றும் மொத்த புத்தகங்களின் கூடுதல் (1570 புத்தகங்கள்) இணைக்கப்பட்டுள்ளது.

5. பள்ளியில் பராமரிக்கப்படும் பதிவேடுகளின் பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது.

6. பள்ளியிலுள்ள மொத்த அறைகள், அதில் ஒவ்வொரு பிரிவிற்கும் ஒதுக்கப்பட்ட வகுப்பறைகள், ஆய்வகம் மற்றும் நூலகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட அறைகள், பிற அறைகள் ஆகிய விவரம் இணைக்கப்பட்டுள்ளது.

7. பள்ளியின் கழிப்பறை வசதி விவரம் இணைக்கப்பட்டுள்ளது.

8. மாணாக்கர்களிடம் பள்ளியில் வசூலிக்கப்படும் கட்டண விவரம் இணைக்கப்பட்டுள்ளது.

9. பள்ளியில் உள்ள ஆசிரியர்கள் விவரப் பட்டியல் மற்றும் ஆசிரியரல்லாதோர் விவரப் பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது.

10. 19.11.2019 அன்று திருச்செங்கோடு பாரத மாநில வங்கிக் கிளையில் விண்ணப்பக் கட்டணம் ரூ.1500/– உரிய அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டு அசல் சலான் இணைக்கப்பட்டுள்ளது.

11. அறக்கட்டளை தீர்மானம் சார்ந்த நோட்டரியிடமிருந்து பெறப்பட்ட ஆவண நகல் இணைக்கப்பட்டுள்ளது.

12. பள்ளி குழு அமைக்கப்பட்ட விவரம் இணைக்கப்பட்டுள்ளது.

13. 24.12.2018 அன்று ஆவண எண்:11/2018–ன்படி சங்ககிரி சார் பதிவாளர் அலுவலகத்தில் கே.எஸ். கல்வி அறக்கட்டளை என்ற பெயரில் அறக்கட்டளை பதிவு செய்யப்பட்டு பதிவாவண நகல் இணைக்கப்பட்டுள்ளது. மேலும் 01.02.2019 அன்று ஆவண எண்:4/2019–ன்படி சங்ககிரி சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட மேற்காண் அறக்கட்டளை பதிவாவணத்திற்கான திருத்தப்பத்திர பதிவாவண நகல் இணைக்கப்பட்டுள்ளது.

14. குத்தகை பத்திரம் போன்ற ஆவணங்களில் பள்ளியின் பெயருடன் சீனியர் செகண்டரி என்ற வார்த்தை இடம்பெற்றுள்ளதால் 23.01.2020 அன்று ஆவண எண்:167/2020–ன்படி சங்ககிரி சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட இவ்வார்த்தைகள் நீக்கப்பட்டதற்கான திருத்தப் பத்திர பதிவாவண நகல் இணைக்கப்பட்டுள்ளது.

15. (அ) 04.01.2019 அன்று சங்ககிரி சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.36/2019–ன்படி கே.எஸ். கல்வி அறக்கட்டளை பெயரில் கே.எஸ்.இண்டியன் ஸ்கூல் (சீனியர் செகண்டரி ஸ்கூல். சி.பி.எஸ்.இ) நடத்திக் கொள்ள 03.01.2019 முதல் 02.01.2052 முடிய 33 வருடங்களுக்கு குத்தகை ஒப்பந்த பத்திரம் பதிவு செய்யப்பட்டு பதிவாவண நகல் இணைக்கப்பட்டுள்ளது. – (ச.எண்:220/5B –0.26 ¼ ஏக்கர், ச.எண்.220/6A–0.11 ஏக்கர், மொத்தம்: .37 ¼ ஏக்கர்)

(ஆ)23.01.2020 அன்று சங்ககிரி சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.168/2020–ன்படி கே.எஸ். கல்வி அறக்கட்டளையின் கீழ் கே.எஸ். இண்டியன் ஸ்கூல் துவங்க 23.01.2020 முதல் 22.01.2053 முடிய 33 வருடங்களுக்கு குத்தகை ஒப்பந்த பத்திரம் பதிவு செய்யப்பட்டு பதிவாவண நகல் இணைக்கப்பட்டுள்ளது.– (ச.எண்:220/5A – 1.35ஏக்கர், 220/4 – 0.45 ஏக்கர், 220/9 –0.76 ஏக்கர், மொத்தம் – 2.56 ஏக்கர்).

- (அ) + (ஆ) = மொத்த நில அளவு : 2.93 ¼ ஏக்கர்

16. கிரய பத்திரம்/தான செட்டில்மெண்ட் பத்திரம்/வில்லங்கச் சான்று/பட்டா நகல்/ கிராம நிர்வாக அலுவலர் ஒப்பம் இடம்பெற்றுள்ள FMB நகல் இணைக்கப்பட்டுள்ளது. (ஆவண எண் 875/2017 நாள்.22.06.2017–ன்படி பதிவு செய்யப்பட்ட கிரய பத்திரத்தின் ப.எண்.7–ல் 2ஆவது அயிட்டம் என குறிப்பிடப்பட்டுள்ள சொத்து விவரத்தில் ச.எண் 220/5–ன் 1ஆவது தாக்கில் – 82 ½ செண்ட் நிலமும் மற்றும் 2வது தாக்கில் – 26 ¼ செண்ட் நிலமும் கிரயத்திற்கு சேர்ந்ததாக குறிப்பிடப்பட்டு, இரண்டிலும் சேர்த்து 1.08 ¾ ஏக்கர் என்பதற்கு பதில் 1.01 ½ என தவறாகக் குறிப்பிடப்பட்டுள்ளது )

17. பள்ளிக் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டதற்கான பொறியாளர் சான்று இணைக்கப்பட்டுள்ளது.

18. R.C8900/2009/C2 Dated:03.11.2009ன்படி நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவரால் அங்கீகரிக்கப்பட்ட பொறியாளரால் 01.05.2019 முதல் 30.04.2022 முடிய 500 நபர்களுக்கு வழங்கப்பட்ட கட்டிட உறுதிச் சான்று இணைக்கப்பட்டுள்ளது. (சர்வே எண்.220/5B, 220/6A)

19. K.Dis.No:5441/B1/2020 Dated 05.11.2020-ன்படி துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள், நாமக்கல் மூலம் 2020–21 ஆண்டிற்கு வழங்கப்பட்டுள்ள சுகாதாரச் சான்று நகல் இணைக்கப்பட்டுள்ளது.

20. எண்: 01/2020 நாள்.05.06.2020–ன்படி வெப்படை தீயணைப்பு மீட்பு பணி நிலைய அலுவலரால் வழங்கப்பட்ட தீயணைப்புத் துறையின் தடையின்மைச் சான்று நகல் இணைக்கப்பட்டுள்ளது. (சர்வே எண்.220/5, 220/6)

21. ந.க.எண்.550/2018/இவஅ–3/நாள்.05.03.2018–ன்படி நாமக்கல், நெடுஞ்சாலைத் துறை கோட்டப் பொறியாளரால் (க(ம)ப) இப்பள்ளிக் கட்டடம் கட்டிக் கொள்ள வழங்கப்பட்ட தற்காலிக அனுமதி ஆணை நகல் இணைக்கப்பட்டுள்ளது.

22. K.Dis.No: 1511/2019(A1) Dated:12.07.2019–ன்படி குமாரபாளையம் வட்டாட்சியரால் 01.05.2019 முதல் 31.04.2022 முடிய 500 நபர்களுக்கு வழங்கப்பட்ட கட்டிட உரிமச் சான்று நகல் இணைக்கப்பட்டுள்ளது. (சர்வே எண்.220/5B, 220/6A)

23. சேலம் நகரமைப்பு துணை இயக்குநரின் இசைவு பெறப்பட்ட கட்டிட வரைபட நகல் இணைக்கப்பட்டுள்ளது. (சர்வே எண்.220/5B, 220/6A) கட்டிட வரைபடத்தில் Name of the Applicant–ல் கே.எஸ். இண்டியன் ஸ்கூல் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

24. பள்ளி சார்ந்த புகைப்படங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

25. மாணவர்கள் பாதுகாப்பு சார்ந்த உறுதி மொழிகள் இணைக்கப்பட்டுள்ளது.

26. இப்பள்ளியின் விளையாட்டிடம் பள்ளி வளாகத்திலேயே என்பதற்கான பள்ளி தாளாளரின் சான்று இணைக்கப்பட்டுள்ளது.

27. அரசாணை (நிலை) எண்.270 பள்ளிக் கல்வி (எக்ஸ்2)த் துறை, நாள் 22.10.2012–ன்படி குறிப்பிடப்பட்ட நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்ட விவரம் இணைக்கப்பட்டுள்ளது.

28. இப்பள்ளி வளாகத்தில் வேறு வகையான பள்ளிகள் செயல்படவில்லை என்பதற்கான பள்ளி தாளாளரின் சான்று இணைக்கப்பட்டுள்ளது.

29. கே.எஸ். கல்வி அறக்கட்டளையின் கீழ் வேறு வகையான பள்ளிகள், கல்லூரிகள் செயல்படவில்லை என்ற பள்ளி தாளாளரின் உறுதிமொழி இணைக்கப்பட்டுள்ளது.

30. பள்ளிக்கு அருகில் மத்திய அரசு அலுவலக விவரம் இணைக்கப்பட்டுள்ளது.
    - இந்தியன் ஓவர்சீஸ் வங்கி
    - அஞ்சல் நிலையம், சௌதாபுரம்
    - அஞ்சல் நிலையம், எலந்தக்குட்டை

31. 5 கிலோமீட்டர் சுற்றளவில் உள்ள மூன்று பள்ளிகளிலிருந்து இப்பள்ளி துவங்க தடையின்மைச் சான்று பெற்று இணைக்கப்பட்டுள்ளது.

- ஸ்ரீ வெற்றி விநாயகா நர்சரி மற்றும் பிரைமரி பள்ளி, சௌதாபுரம்
- எவர் கிரீன் இண்டர்நேஷனல் நர்சரி மற்றும் பிரைமரி பள்ளி, தெற்குப்பாளையம்
- அ.மே.நி.பள்ளி, சௌதாபுரம்

<u>அங்கீகாரச் சான்றுக்கான ஆவணங்கள்</u>

32. குழந்தைகளுக்கான இலவச கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009 – விதிகள் 2011ன்படி படிவம்1ல் சுய உறுதி மொழி படிவம் Form – I "Self Declaration Cum Application for Certificate of Recognition" இணைக்கப்பட்டுள்ளது.

33. தனியார் பள்ளிகள் ஒழுங்குமுறை சட்ட விதி 1974ன்படி படிவம் VI மட்டும் இணைக்கப்பட்டுள்ளது. பிற்சேர்க்கை படிவம் பூர்த்தி செய்து இணைக்கப்பட்டுள்ளது.

எனவே நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம் வட்டம், சௌதாபுரம் அஞ்சல், சங்ககிரி மெயின் ரோடு, செட்டியார்கடை, கே.எஸ். கல்வி அறக்கட்டளை மூலம் கே.எஸ்.இண்டியன் ஸ்கூல் என்ற பெயரில் 2020–21 ஆம் கல்வியாண்டில் மத்திய பாடத் திட்டத்தின் கீழ் ப்ரி.கே.ஜி. முதல் 7ஆம் வகுப்பு முடிய புதிய சி.பி.எஸ்.இ. பள்ளி துவங்க தடையின்மைச் சான்று (இணைப்பு பெற) மற்றும் அங்கீகாரச் சான்று வேண்டி பார்வையில் காணும் கடிதத்துடன் பெறப்பட்ட கருத்துருவினை உரிய இணைப்புகளுடன் பரிந்துரை செய்து அனுப்பியுள்ளேன் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இணைப்பு : கருத்துரு மற்றும் பார்வை அறிக்கை

14.12.2020

முதன்மைக் கல்வி அலுவலர்,
14/12/2020 நாமக்கல்.

நகல் :
தாளாளர்,
கே.எஸ்.இண்டியன் ஸ்கூல்,
செட்டியார் கடை, சங்ககிரி மெயின் ரோடு,
சௌதாபுரம் (அஞ்சல்), குமாரபாளையம் வட்டம்,
நாமக்கல் மாவட்டம் – 638 008.